போலவே நிரந்தரமாக, இன்னும் கூடுதலாகவே சத விகிதத்தை அதிகரித்து கொடுப்பதன் மூலம் கைத்தறித் துணித் தேக்கத்தின் மூலம் ஏற்படும் நெருக்கடியை நிவர்த்திப்பதற்கு அரசாங்கம் முயலுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கைத் தறித் துணித் தேக்கத்தை நிவர்த்திப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முன்பு நான் குறிப்பிட்டதைப் போன்று இந்த யோசனைகளெல்லாம் விற்பனை வரி மானியத்தின் மீது பேசும்போது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

**திரு. நா. வீராசாமி :** கைத்தறித் தலையணை உறைக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்திருப்பதாக தெரிவித்தார்கள். அப்படி விலக்கு அளிப்பதன் மூலம் இந்த அரசுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதற்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பதன் மூலம் சொற்ப தொகைதான், சொற்பம்கூட சரி அல்ல, நஷ்டம் ஏற்படுகிறது. மெட்ராஸ் ஜெனரல் ஸேல்ஸ் டாக்ஸ் மூலம் ரூ. 28,000-ம், சென்ட்ரல் ஸேல்ஸ் டாக்ஸ் மூலம் ரூ. 10,600-ம் இதனால் நஷ்டம் ஏற்படும்.

**திரு. ஏ. எம். இராஜா :** தமிழ்நாட்டிலே கைத்தறித் துணிகளுக்குப் போடப்படுகின்ற விற்பனை வரிகள் மூலம் எவ்வளவு தொகை கிடைக்கின்றது ? விற்பனை வரியை எடுத்துவிட்டால், அந்த இழப்பை சரிக்கட்ட வேறு வழி வகைகளை அரசு கையாளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கைத்தறித் தொழிலின் வளர்ச்சியிலே இருக்கிற அக்கறையை நான் பாராட்டுகிறேன். அவர்கள் சொல்லுகிற யோசனை கொஞ்சம் பயங்கரமான யோசனை. கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காக வேறு பல முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் நிதி நிலைமைகளை அனுசரித்து வரியைக் குறைவாக வைத்து நடத்த வேண்டும் என்பதுதான் பேரறிஞர் அண்ணா அமைத்துத் தந்த வழியாகும். அது பரிசீலனைக்கு உரியதா என்பது நம்முடைய நிதி நிலைமை வசதிகளைப் பொறுத்தது.

**திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் பெல்ஜியத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மத கன்னிமார்கள் கண் பார்வை இழந்தவர்களுக்கும், முடமானவர்களுக்கும் விடுதி நடத்துகின்றார்கள். அங்கே உள்ளவர்கள் லேஸ் போன்றவற்றைத் தயாரித்து பம்பாய் முதலிய இடங்களுக்கு அனுப்புகிறார்கள். அப்படி அனுப்பக்கூடிய லேஸ்களுக்கு ஸேல்ஸ் டாக்ஸ் விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு வரி விலக்கு அளிக்க தற்போது அரசாங்கத்தினிடம் ஏதேனும் செயற்குறிப்பு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினருக்குச் சொன்ன பதிலைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

Under Section 17 of the Madras General Sales Tax Act, we have provided for the grant of exemption from liability to pay tax in respect of any sale or purchase of any specified goods or class of goods or by any specified class of persons.

17-வது விதியை அனுசரித்து தனியான நிறுவனத்திற்கு தனியான விதி விலக்கு அளிக்கும் உரிமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதிலே இருக்கிற விசேஷ அடிப்படையிலே அரசாங்கம் விதி விலக்கு அளிக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அதன் மதிப்பின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படும்.